**இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் - 2017**

---

இலங்கை மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புரைகளும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை 2018 யூன் 21 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒட்டுமொத்த வர்த்தகக் கடன்பட்டோரில் 90.55 சதவீதமான ரூபா 9,267,922,705 வைத்திய வழங்கல் பிரிவிலிருந்து பெறப்பட வேண்டியிருந்தபோதும், சுகாதார, போசனை மற்றும் தேசிய வைத்திய அமைச்சினது ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அம்மீதி ரூபா 9,049,836,862 ஆகவிருந்தது. மீதிகளைக் கணக்கிணக்கம் செய்யும் கூற்றைத் தயாரித்து, ரூபா 218,085,843 வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு, கணக்குகளில் தேவையாக சீராக்கல்களை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 210 கடன் கொடுத்தோரது ரூபா 818,160,881 வர்த்தகக் கடன் கொடுத்தோர் மீதியில் 106 கடன் கொடுத்தோருக்குரிய ரூபா 48,844,761 மீதியை உறுதி செய்வதற்கான சான்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மருத்துவ வழங்கற் பிரிவிலிருந்து பெற வேண்டிய மீதி ரூபா 9,267,922,705 ஆகும். இதில் ரூபா 211,810,803 எட்டு ஆண்டுகளுக்கும் 19 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட பழமை வாய்ந்த மீதிகளாகும். ரூபா 9,056,111,902 கடன் சம்பந்தமான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கொள்கைக்கமைய விற்பனை செய்யப்பட்ட தினத்திலிருந்து 30 முதல் 45 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் வர்த்தகக் கடன்பட்டோரது கடனை அறவிட வேண்டுமாயினும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 967,042,539

கடன் மீதியில், தனியார், அரச மற்றும் அரைப்பங்கு அரச உடைமையுடைய நிறுவனங்களிலிருந்து ரூபா 12,327,940 ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகவும் இலங்கை பாராளுமன்றத்திலிருந்து ரூபா 9,044,299 ஓராண்டிற்கு மேலாகவும் அறவிடப்பட வேண்டிய கடனாக இருந்தன. இதனை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அதில் ரூபா 10,440,049 கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(இ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த காப்புறுதி இழப்பீடு ரூபா 2,507,547 ஆகும். அதில் ரூபா 1,835,198 ஐ அறவிடுவதற்கு 2 முதல் 12 ஆண்டுகளாக சபை தவறியிருந்தது.

(ஈ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு திருப்பிப் பெற வேண்டிய கொள்கலன் வைப்புக் கணக்கு மீதி ரூபா 11,769,850 ஆகும். இதில் ரூபா 6,462,823 ஐ அறவிடுவதற்கு 2 முதல் 10 ஆண்டுகளாகக் கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(உ) மின் உற்பத்தி இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 105,672 முற்பணமும் 2007 முதல் 2012 வரையான காலப்பகுதியின்போது வழங்குநர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 2,971,688 முற்பணமும் கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 22 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஊ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்குச் செலுத்த வேண்டிய விலைப்பட்டியல் கணக்கினது மீதி ரூபா 2,773,021,077 ஆகும். அதில் ரூபா 4,859,879 மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த வழங்குநர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படாத நூற்றுக்கு நூறு நாணயக் கடிதங்களது பெறுமதியையும் நிறுத்தி வைத்த பணத்தையும் உள்ளடக்கியிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 770 ஆம் நிதிப்பிரமாணம் | (i) 2016 யூன் 24 முதல் மூடப்பட்டவாறிருக்கும் 3 சுற்றுலா விடுதிகளுக்குரிய நிலையான சொத்துக்கள், 49 நிலையான சொத்துக்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கோ அல்லது பயன்படுத்த முடியாதவிடத்து நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அப்பொருட்கள் தொடர்பான பொருட் கணிப்புச் சபையினது சிபாரிசுடன் அவற்றை விற்பனை செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாயினும், 2018 மே 03 ஆந் திகதியளவிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படாது அவை கூட்டுத்தாபனத்தின் கீழ்த் தளத்தில் வைக்கப்பட்டிருந்தன. |
| | (ii) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பு |

| | | |
|---|---|---|
| | | அறிக்கையின் பிரகாரம், ரூபா 1,322,750 கிரயமுடைய 117 பொருட்களும் கிரயத்தை குறிப்பிடாத 171 பொருட்களும் பழுதடைந்திருந்தபோதும், நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொருட் கணிப்புச் சபையை அமைத்து, பயன்படுத்த முடியாத பொருட்களை இனங்கண்டு அவற்றை விற்பனை செய்வதற்கோ அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2007 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய 09/2007(i) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள மற்றும் நிர்வாகம்) பிரதி முகாமையாளர் (பராமரிப்பும் நிர்மாண வேலையும்), மேற்பார்வையாளர் ஆகிய பதவிகளுக்கு ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்தபோதும் குறித்த அமைச்சின் செயலாளரினது தனிப்பட்ட ரீதியிலான சிபார்சு பெறப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தினது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 1,089,431,741 நிகர இலாபமாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 1,241,744,631 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிகர இலாபத்தில் ரூபா 152,312,890 நலிவு காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது நிதிசார் செலவினம் ரூபா 29,989,320 அல்லது 461 சதவீதம் அதிகரித்தமையே மேற்படி நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்கையில் 2013 முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக நிகர இலாபம் ஏற்பட்டிருந்தபோதும், அது வருடாந்தம் மாற்றமடைந்தவாறிருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில் ரூபா 777,218,094 ஆகவிருந்த நிகர இலாபம் மீளாய்வாண்டு முடிவில் ரூபா 1,560,027,058 ஆகியிருந்தது. எவ்வாறாயினும், நிதிக்கூற்றுக்களில் ஊழியர்களது ஊதியம், அரசிறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,065,476,098 ஆகவிருந்த கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு மாற்றங்களுடன் 2017 ஆம் ஆண்டில் ரூபா 3,261,654,325 வரை அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது பங்களிப்பு 0.7 சதவீதம் குறைவடைந்துமிருந்தது.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் திரவவியல் விகிதத்தில் நலிவு அவதானிக்கப்பட்டதுடன், கடன்பட்டோர் புரள்வு விகிதம் 1.7 தடவை குறைந்திருந்ததுடன் கடனைத் திருப்பி அறவிடும் காலம் 31 நாட்களால் அதிகரித்துமிருந்தது. இது சம்பந்தமாக கவனம் மேற்கொண்டு கூட்டுத்தாபனத்தின் கடனை அறவிடும் செயற்பாட்டு நடவடிக்கைகள் வினைத்திறன் மிக்கதாக அமைய வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்**

வெளி நிறுவனங்களாலும் உத்தியோகத்தர்களாலும், சாதனையற்ற, பதவி நீக்கம் செய்யப்பட்ட, பதவி நீக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 04 நீதிமன்ற வழக்குகளும் 05 வெளி நிறுவனங்களுக்கு எதிராகக் கூட்டுத்தாபனத்தால் ரூபா 23,372,660 கூட்டுத் தொகையையுடைய இழப்பீட்டைக் கோரியும் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

**3.4 செலவினத்தில் அசாதாரண அதிகரிப்பு**

முன்னைய ஆண்டினதும் மீளாய்வாண்டினதும் வங்கி மேலதிகப்பற்று வட்டி முறையே ரூபா 5,434,349 மற்றும் 35,199,403 என்பனவாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் அவ்வாறான செலவினம் 548 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. மருத்துவ வழங்கல் பிரிவுக்கான வழங்கல் அதிகரித்தபோதும் அவற்றிற்கான பணத்தைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதால் வங்கி மேலதிகப்பற்று வசதிகள் அதிகரித்தமையே அதற்கான காரணமாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

கூட்டுத்தாபனம் உருவாகியமை தொடர்பாக 1971 செப்டம்பர் 22 ஆந் திகதிய 14976/8 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நுண்ணிய இரசாயனப் பொருள் உற்பத்தித் தொழிலை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்கு அனுசரணையாக இருப்பதும், மருந்து விற்பனைகள் தொடர்பாகவும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் போன்ற பிரதான நோக்கங்களை ஈடேற்றுவதற்கு இயலுமானவாறு கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகளும் மீளாய்வும்

மீளாய்வாண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கிய பின்வரும் செயற்பாடுகளை ஈடேற்றுவதற்குச் சபை தவறியிருந்தது.

(i) மருந்துகளை இறக்குமதி செய்யும்போது இடைத்தரகர்கள் இல்லாது நேரடி இறக்குமதிக்கு வழிவகுத்தல்.

(ii) கூட்டுத்தாபனத்தின் சகல செயற்பாட்டுப் பிரிவுகளையும் ஒருங்கிணைப்பதன் பொருட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட வணிக வளத் திட்டமிடல் முறைமையை இறுதியாக நிறுவுதல் (System training), ஒருசேர செயற்படுத்துதல் (Parallel Run), முறைமையின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளுதல் (Operational acceptance of the sytem) எனும் கட்டங்களை அமுலாக்குதல்.

(iii) வணிக வளத் திட்டமிடல் முறைமையை வெளி முறைமைகளுடன் ஒருங்கிணைத்தல்.

(iv) வியாபாரத் தொடர்த் திட்டத்தைத் தரப்படுத்துதல் (Upgrade Business Continuity Plan)

(v) புதிய உற்பத்திகளைச் சேர்த்துக் கொள்வதற்கான உற்பத்தி திட்டத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான பதவியணியினருக்கான பயிற்சி, பொருட் கொள்வனவுத் திட்டமிடல் மற்றும் உற்பத்திகளை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகள்

(vi) ஆய்வுகூட வசதிகளை விரிவாக்குவதற்கான நிர்மாண வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

(vii) நவீன மற்றும் அத்தியாவசிய உபகரணங்களுடன் ஆய்வு கூடங்களை அபிவிருத்தி செய்தல்.

(viii) ஆட்சேர்ப்பு நடைமுறையை மீளாய்வு செய்தல்.

(ix) பொது வசதி அபிவிருத்தியின் கீழ் பராமரிப்புப் பிரிவை சக்திமிக்கதாக்குதல்.

இச்செயற்பாடுகளுள் (ii) ஆம் (viii) ஆம் இலக்கச் செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தன.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

2000 செப்டெம்பர் 19 ஆந் திகதியன்று கூட்டுத்தாபனம் பதுளை மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், பதுளை பஸ் தரிப்பிட வர்த்தகக் கூட்டுத்தொகுதியில் உள்ள கட்டிடத்தை குத்தகைக்குப் பெற்று அரச ஒசுசல ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், 2011 நவம்பர் 17 ஆந் திகதியன்று ஒசுசலவை அக்கட்டிடத்திலிருந்து அப்புறப்படுத்தி 2013 சனவரி 15 ஆந் திகதி தொடக்கம் 5 ஆண்டு காலத்திற்கு மாதாந்தம் ரூபா 55,000 வீதப்படி வேறு நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய குத்தகையாளர் 03 மாதங்களுக்குக் குத்தகைத் தொகையை வழங்காதவிடத்து குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் அதிகாரத்தைக் குத்தகைக்கு வழங்குபவர் கொண்டிருந்தபோதும், 2013 செப்டெம்பர் 05 ஆந் திகதியின் பின்னர் 09 மாதங்களாகக் குத்தகையாளர் குத்தகைப் பணத்தை வழங்காது புறக்கணித்திருந்தபோதும், குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்குக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குத்தகைப் பணத்தை கொடுப்பனவு செய்யாதிருந்தமை தொடர்பாக கூட்டுத்தாபனம் அறிவுறுத்தியதன் காரணமாக குத்தகையாளர் அவ்வவ்போது ரூபா 1,890,000 க்கான காசோலைகளையும் பணத்தையும் வழங்கியிருந்தபோதும், அதில் ரூபா 1,330,000 பெறுமதியுடைய காசோலைகளுக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டு, கணக்காய்வுத் தினமான 2018 மார்ச் 21 ஆந் திகதியளவில் அறவிடுவதற்குத் தவறியிருந்த மொத்த நிலுவை ரூபா 2,003,320 ஆகவிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இடைப்போக்கில் உள்ள கையிருப்புக் கணக்கினது காலப்பகுப்பாய்வின் பிரகாரம் ரூபா 44,621,916 கிரயமுடைய கையிருப்பு 6 மாதங்களுக்கு மேலாகவும் ரூபா 7,574,513 கிரயமுடைய கையிருப்பு ஓராண்டிற்கு மேலாகவும் இடைப்போக்கில் உள்ள கையிருப்புகளாகக் காட்டப்பட்டிருந்தமை உறுதியானது. மருத்துவ வழங்கல் பிரிவால் பொறுப்பேற்கப்பட்ட கையிருப்பு தொடர்பாக வரவுப் பத்திரங்களை வழங்குவதில் நிலவிய தாமதம் மற்றும் மருத்துவ வழங்கல் பிரிவு பொறுப்பேற்காத கையிருப்பைக் பொறுப்பேற்பதற்கான காரணத்தைக் கண்டறிந்து நிவாரணத்தை தேடாமையால் அக்கையிருப்பு நெடுங்காலமாக இடைப்போக்கில் உள்ள கையிருப்பாக இருந்து வந்தன.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்படுவதற்குக் கொள்வனவு செய்யப்பட்டு, முன்னைய ஆண்டின்போது தரமற்றதாகவும் காலங் கடந்தனவாகவும் காணப்பட்ட மருந்துகளது மொத்தக் கிரயம் முறையே ரூபா 110,007,776 மற்றும் 19,980,259 என்பனவாகும். மீளாய்வாண்டில் தரமற்றதாகவும் காலங் கடந்ததாகவும் காணப்பட்ட மருந்துகளது மொத்தக் கிரயம் முறையே ரூபா 23,561,218 மற்றும் ரூபா 80,834,686 என்பனவாகும். முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் தரமற்றவையாகக் காணப்பட்ட மருந்துகளது மொத்தக் கிரயம் ரூபா 133,568,994 ஆகும். இதில் ரூபா 26,603,418 குறித்த மருந்து வழங்குநர்களிடமிருந்து 2018 மார்ச் 26 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்ததுடன், காலங் கடந்த மருந்துகளால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மொத்த இழப்பு ரூபா 89,973,349 ஆகவுமிருந்தது.

(இ) மீளாய்வண்டில் செயற்பட்டவாறிருந்த ஒசுசலக்களின் எண்ணிக்கை 37 ஆகும். அவற்றுள் 19 நட்டத்தில் இயங்கியிருந்தன. மொத்த நட்டம் ரூபா 41,286,421 ஆகும். அவிசாவளை, மினுவாங்கொட, தியதலாவ, தங்காலை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், இரத்மலானை ஆகிய நகரங்களில் அமைந்துள்ள 7 ஒசுசலக்கள் 2013 தொடக்கம் மீளாய்வாண்டு வரை தொடர் நட்டத்திற்குள்ளாகியிருந்தன. நட்டத்தைக் குறைப்பதற்கான வழிவகைகள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டினது மொத்த நட்டத்தில் 37.54 சதவீதத்தையும் அந்த 7 ஒசுசலக்களே உருவாக்கியுமிருந்தன.

(ஈ) மருத்துவ வழங்கற் பிரிவிற்கு தரமற்றதும் பழுதடைந்ததுமான மருந்துகளை வழங்கியமை மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான மருந்துகளை வழங்கியிருந்தமை தொடர்பாகச் செலவாகிய கிரயம், நிர்வாகக் கட்டணம், அக்கையிருப்பினை அழிப்பதற்கான செலவினம் போன்றவற்றை வழங்குநரிடமிருந்து அறவிடுவதன் பொருட்டு 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் வழங்கப்பட்டிருந்த வரவுப் பத்திரங்களது பெறுமதி ரூபா 1,303,740,147 ஆகும். எனினும், அதில் ரூபா 579,996,167 அறவிடப்படுவது தவறிப் போனதுடன் அதில் உள்ளடங்கிய ரூபா 104,803,706 தவறிழைத்த வழங்குநர் பட்டியலில் இடப்பட்ட வழங்குநர்களைச் சார்ந்ததால் அதனை அறவிடுவதானது நிச்சயமற்றதாக உள்ளது.

(உ) Ascorbic Acid Tablets BP/USP 100mg மருந்தின் 60,000 கூறுகளை 30,000 கூறுகளாக இரு பொருட்களின் கீழ் கொள்வனவு செய்திருந்ததுடன் இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 நவம்பர் 15 ஆந் திகதியன்று இம்மருந்தின் முதல் 30,000 கூறுகளைக் கூட்டுத்தாபனம் பெற்றிருந்ததுடன் 25,450 கூறுகள் தரமற்றவை என இனங்காணப்படும் வரை அதில் 18,326 கூறுகள் நோயாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. 3,446 கூறுகளைக் கொண்ட மருந்தை வழங்குநர் மீண்டும் வழங்கியிருந்தபோதும், எஞ்சிய 22,004 கூறுகளுக்குரிய ரூபா 11,687,205 கிரயம் மற்றும் அதன் 25 சதவீத தண்டப்பணத் தொகையாகிய ரூபா 2,921,801 என்பவற்றை வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) முதலாவது 30,000 கூறு மருந்தில் 25,450 கூறுகள் தரமற்றவையாகையால் இரண்டாவது 30,000 கூறுகளையும் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தரமற்ற 22,004 கூறுகளுக்குரிய ரூபா 14,609,006 அறவிடப்படாதிருக்க இரண்டாவது 30,000 கூறுகளுக்குமான முழுத் தொகையும் வழங்குநருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 2015 செப்டெம்பர் 11 ஆந் திகதி பெறப்பட்ட இரண்டாவது 30,000 கூறுகளில் 1,500 கூறுகள் தரமற்றவனவாக இருந்தன. எனினும், 2018 மார்ச் 30 ஆந் திகதியளவிலும் அதன் ரூபா 796,710 கிரயமும் 25 சதவீத தண்டப்பணமான ரூபா 199,177 தொகையையும் வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iv) குறித்த பொருட் கட்டளைக்கான 60,000 கூறு மருந்தை வழங்கி, 03 நாட்களின் பின்னர் அம்மருந்தில் மேலும் 60,000 கூறுகளுக்குப் புதிய பொருட் கட்டளையை வேறொரு வழங்குநருக்குச் சமர்ப்பித்து 2016 சனவரி 05 ஆந் திகதியளவில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2016 சனவரி 31 ஆந் திகதியளவில் 74,370 கூறுகள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததுடன், சராசரி மாதாந்த விற்பனை அளவுக்கு அதிகமாகக் கையிருப்பைக் கொள்வனவு செய்தமையால் முதலாவது வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 27,347 கூறுகளும் இரண்டாவது வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 501 கூறுகளும் அடங்கலாக 27,848 கூறுகளைக் கொண்ட மருந்து 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் காலாவதியாகியிருந்தன. மருந்து காலாவதியாகியதால் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபா 14,827,925 ஆகும்.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 டிசம்பர் 31 ஆந் திகதியளவில் 145 பதவி வெற்றிடங்கள் நிலவின. அவ்வெற்றிடங்களுள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியைச் சேர்ந்த 07 நிறைவேற்றுத்தர பதவிகளுக்கும் நிறைவேற்றுத் தரத்தில் அல்லாத பதவியைச் சேர்ந்த 11 பதவிகளுக்கும் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாது பதில் அடிப்படையில் அல்லது வேலையை ஈடு செய்யும் விதத்தில் வேறு பதவிகளில் உள்ள 18 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். உத்தியோகத்தர்களை நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்கான வாய்ப்பிருந்தும் அவ்வாறு நடைபெறாமையால் கூட்டுத்தாபனத்தில் பணி புரியும் அப்பதவிகளுக்கு தகைமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் நியமனம் பெறும் வாய்ப்பு இழப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக 15 பதவிகளில் 12 உத்தியோகத்தர்கள் நிரந்தரமாகவும் 03 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத முகாமையாளர் (வர்த்தக வள திட்டமிடல்) எனும் பதவிக்கு 05 ஆண்டுகளாகவும் பிரதி முகாமையாளர் பதவிக்கு (பராமரிப்பும் நிர்மாண வேலைகளும்) 06 மாதங்களாகவும் ஒப்பந்த அடிப்படையில் 02 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஈ) நிரந்தர பதவியாகிய பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளமும் நிர்வாகமும்) பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு 2017 ஏப்ரல் 28 ஆந் திகதி புதினப் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்களும் கோரப்பட்டு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவர் அப்பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய முகாமைத்துவ மட்டத்திலான I ஆந் தர மனிதவள மற்றும் நிர்வாகத் துறைக்குக் குறைந்தது 05 ஆண்டு நிரந்தரப் பதவியில் உள்ள கூட்டுத்தாபனச் சேவையில் உள்ளோர் விண்ணப்பிக்க முடியும். எனினும், பிரசுரிக்கப்பட்ட புதினப் பத்திரிகை விளம்பரத்தில் அத்தகைமை உள்ளடங்காததால் அத்தகைமையுள்ள கூட்டுத்தாபன நிரந்தர உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க இயலாது போனது. மேலும், இவ்வறிக்கைத் திகதி வரை இப்பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) 2017 யூன் 05 தொடக்கம் வெற்றிடமாக இருந்த பிரதிப் பொது முகாமையாளர் (தொழில்நுட்ப ஆய்வுகூடம் மற்றும் உற்பத்தி) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு 2017 சனவரி 29 ஆந் திகதி புதினப் பத்திரிகை விளம்பரத்தின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறித்த தகைமைகள் இல்லாமை, நேர்முகப் பரீட்சையில் சித்தியடையாமை போன்ற காரணங்களால் விண்ணப்பதாரர் எவரும் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்நாள் முதல் கணக்காய்வுத் தினமான 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியளவில் 11 மாதங்கள் கடந்த நிலையிலும் மீண்டும் விண்ணப்பங்களைக் கோருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) மேம்பாடு மற்றும் பிரசார உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு கூட்டுத்தாபனம் பிரசுரித்த புதினப் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் 191 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தன. அதில் தகைமை பெற்ற 32 பேருக்கு முதலாம், இரண்டாம் நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தன. இரண்டாவது நேர்முகப் பரீட்சையின் பின்னர், இப்பதவிக்கு மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களது அறிவு இருத்தல் வேண்டுமெனவும் தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறையின் தகைமை மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் நேர்முகப் பரீட்சைக் குழு அங்கத்தவர் ஒருவரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மீளாய்வு செய்யப்படாமலும் எதிர்பார்த்த தகைமை உள்ளடக்கப்படாமலும் 3 சந்தர்ப்பங்களில் புதினப் பத்திரிகை விளம்பரங்கள் கோரப்பட்டிருந்தன. இவ்வறிக்கைத் திகதி வரை குறித்த தகைமை வாய்ந்த உத்தியோகத்தரை ஆட்சேர்க்க முடியாதிருந்தது.

(எ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (பராமரிப்பும் நிர்மாண வேலைகளும்) பதவிக்கு 2017 மே 21 ஆந் திகதியன்று புதினப் பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு அதன் பொருட்டு 19 விண்ணப்பதாரர் விண்ணப்பித்திருந்தனர். அவ்விண்ணப்பதாரருள் எவருமே தகைமைகளை பெற்றிராததால் ஆட்சேர்ப்பு நடைபெறவில்லை எனக் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டபோதும், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது 2 விண்ணப்பதாரர் கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்தமை தெரிய வந்தது. இவ்வறிக்கைத் திகதி வரை இப்பதவிக்கான உத்தியோகத்தரைத் தெரிவு செய்ய இயலாது போயிருந்தது.

## 4.5 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாக நிதியம் ஒன்றை உருவாக்குதல்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 க்கமைய, எதிர்காலப் பொறுப்புகள் உருவாகும் அபாயத்தைக் குறைத்துக் கொள்வதற்காக ஓய்வு காலப் பணிக்கொடைக் கடப்பாடு சம்பந்தமாக முதலீட்டுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தூண்டுதல் அளிக்கப்பட்டபோதும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை எய்துதல்

## 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சிப் பத்திரம் தொடர்பாகக் கூட்டுத்தாபனம் அறிந்திராமையால் அப்பணிகள் சம்பந்தமாக நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ்விலக்கை அடைய வேண்டிய செயற்பாடுகளும் இலக்கை எய்துவதற்கு அளவு கோலாக அமையும் முதலீடுகளையும் இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவும் ஒப்பந்த செயற்பாடுகளும்

#### 6.1.1 பொருட் கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் விற்பனை செய்வதற்காகக் கொள்வனவு செய்யும் மருத்துவ வழங்கல் மற்றும் ஏனைய சொத்துக்களைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டலின்படி பிரதான பொருட் கொள்வனவுத் திட்டமும் பொருட் கொள்வனவு நேர அட்டவணையும் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் கூறு விலைக் கோரல் முறையைக் கடைப்பிடித்து கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின்போது ரூபா 1,236,200 கிரயமுடைய 05 நிழற்பிரதி இயந்திரங்களையும், ரூபா 1,605,400 கிரயமுடைய 02 Fume Hood இயந்திரங்களையும், ரூபா 475,886 கிரயமுடைய 04 பெயர்ப் பலகைகளையும், ரூபா 2,695,163 கிரயமுடைய 61,000 கடதாசிச் சுருள்களையும், ரூபா 1,477,975 கிரயமுடைய Automatic Titrator இயந்திரத்தையும், ரூபா 830,000 கிரயமுடைய 02 குளிரூட்டிகளையும் கொள்வனவு செய்திருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க வழிகாட்டிக் கோவையின் 5.3.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறு விலைக் கோரல் பதிவேடுகளில் தகுதியான மாதிரிகளைப் பயன்படுத்தியிருக்காததுடன் 8.9.1 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் முறையான உடன்படிக்கைகளில் ஈடுபட்டிருக்கவுமில்லை.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.10 (ஆ) வழிகாட்டியின் பிரகாரம், 05 நிழற்பிரதி இயந்திரங்களுக்கு செயலாற்றல் பிணை முறியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன், குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த கூறு விலையாளர் வருடாந்த சேவை மற்றும் பராமரிப்புக் கிரயத்தைச் (Annual cost of service and maintenance) சமர்ப்பித்திராதபோதும், அதனைக் கருத்திற் கொள்ளாது வருடாந்த சேவை மற்றும் பராமரிப்புக் கிரயம் ஆகியவற்றை ஒப்பீட்டளவில் மதிப்பாய்வு செய்யாது, ஆரம்பக் கிரயத்தை இணக்கம் செய்வதினூடாக மாத்திரமே குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த கூறு விலையாளரைத் தெரிவு செய்திருந்தனர்.

(iii) முறையான உடன்படிக்கையில் ஈடுபடாததுடன் தாமதக் கட்டணத்தை அறவிடும் நிபந்தனைகளை கூறு விலை ஆவணங்களில் உள்ளடக்கத்தால் வழங்குநரிடமிருந்து தாமதக் கட்டணத்தை அறவிட முடியாது போனது.

(iv) ஐந்து நிழற் பிரதி இயந்திரங்களையும் Automatic titrator இயந்திரத்தையும் வழங்குவதற்கான கூறு விலைகளைக் கோரும்போது அவ்வியந்திரங்களுக்கான பராமரிப்பையும் சேவைகளையும் வழங்குவதையும் கூறு விலைக் கோரல் ஆவணங்களில் சேர்த்துக் கொள்ளாமையால் குறித்த கம்பனி சமர்ப்பிக்கும் எதுவித கட்டணத்திலும் பராமரிப்பையும் சேவையையும் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது.

(v) அனுராதபுரம் ஒசுசலவிற்குச் பெயர்ப் பலகையை வழங்குதல் மற்றும் அதனைப் பொருத்துதல் தொடர்பாக அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) வழிகாட்டிக்கமைய சகல இணைந்த செலவுகளும் அடங்கலாக மொத்த கிரயத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. இதனை விட, செயலாற்றல் பிணை முறியைப் பெறுவதற்கும் பெயர்ப் பலகைக்கான வெளிச்சத்தை வழங்குவதற்கும் அதனைப் பொருத்துவதற்குமான பொறுப்புக் கூறுவதற்குமான சான்றிதழை பெறுவதற்கும் பெயர்ப் பலகையை வழங்குவதற்கு முன்னர் வழங்குநரால் சமர்ப்பிக்கப்படும் நிர்மாண வேலைகள் (Art work) தொடர்பாகத் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினதும் பொருட் கொள்வனவுக் குழுவினதும் முன் கூட்டிய அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) Tolbutamida Tablets BP / USP 500mg மருந்தினது 15,000 கூறுகளைக் கொள்வனவு செய்வது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இம்மருந்துகளது 15,000 கூறுகளை வழங்குவதற்கான கூறுவிலை கோரல் 2014 பெப்ரவரி 26 ஆந் திகதி நடைபெற்றது. குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்தவர் கேள்விக்கான பிணை முறியைச் சமர்ப்பிக்காததால் இரண்டாவது குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த வழங்குநருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டபோதும், கூறு விலையாளர் அதனை ஏற்காததால் அவரது கேள்விக்கான பிணை முறியாகிய ரூபா 400,000 காசாக மாற்றமடைய வாய்ப்பிருந்தும் அவ்வாறு செய்யாமையால் 2014 ஒக்தோபர் 22 ஆந் திகதியன்று பிணைமுறி காலாவதியாகியிருந்தது.

(ii) இரண்டாவது குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த ஒப்பந்தம் ஏற்கப்படாமையால், கேள்விக்கான பிணை முறியைச் சமர்ப்பிக்காத நிராகரிக்கப்பட்ட குறைந்த கூறு விலையாளருக்கு அரசாங்க பொருட் கொள்வனவுக் வழிகாட்டிக் கோவையின் 7.8.4 ஆம் பிரிவுக்கு முரணாக 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்களில் உள்ள நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தம் வழங்கப்பட்ட தினத்தன்றும் அக் கேள்வியாளர் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பதிவைப் பெறாதவராக இருந்தார்.

(iii) இம்மருந்தினது தேவைக்கேற்ப, 2014 நவம்பர் மாதமளவில் ரூபா 11,049,640 மொத்தக் கிரயமுடைய 9,500 கூறுகளைக் கொண்ட மருந்தைக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருக்க வேண்டுமாயினும், பொருட் கொள்வனவு நடவடிக்கைகளில் 2014 பெப்ரவரி 26 தொடக்கம் 2015 ஆகஸ்ட் 20 வரை 17 மாதங்களுக்கு அதிகமான காலங் கடந்திருந்ததால் மருந்துகளது கையிருப்பை 2016 சனவரி 05 ஆந் திகதியே கூட்டுத்தாபனம் பெற்றிருந்தது. மருந்தைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2015 யூன் தொடக்கம் 2016 சனவரி 05 வரையான 07 மாதங்களின்போது மருந்துக் கையிருப்பு முடிவடைந்திருந்தது. கொள்வனவு நடைமுறைகளில் அதிக காலம் கழிந்ததால் மருந்து விற்பனையாகக் கூடிய காலத்தில் மருந்தை வழங்க முடியாது விற்பனை குறைவாக உள்ள காலத்தில் தேவைக்கதிகமான மருந்து கிடைக்கப்பெற்றதால் ரூபா 700,308 கிரயமுடைய 560 கூறுகளைக் கொண்ட மருந்து காலாவதியாகியிருந்தன. இதற்குப் புறம்பாக, ரூபா 195,086 கிரயமுடைய 156 கூறுகள் தரமற்றனவாகி கூட்டுத்தாபனம் ரூபா 895,394 இழப்புக்குள்ளாகியது. அதில் ரூபா 320,458 மாத்திரமே 2018 ஆம் ஆண்டின்போது வழங்குநரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) Formoterol Fumarate and Budesonide Dry Powder capsules (Faracort – DP Caps 400) மருந்தினது 30,000 கூறுகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்குநருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் தாமதக் கட்டணமாகிய ரூபா 20,255,000 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**6.1.2 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச ஒசுசலவின் கொழும்பு 07 இல் அமைந்துள்ள நிர்மாண வேலைக்கான ரூபா 106,305,300 ஒப்பந்தம் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (இ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்த வேலை முடிவுற்றதன் பின்னரான நடவடிக்கைகளுக்கான அவசர, எதிர்பாரா நிதியேற்பாடு (Contingeney Provision) மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

(ii) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 வழிகாட்டிக்கமைய ஒப்பந்தகாரர் வழங்கிய செயலாற்றல் பிணை முறி 2016 பெப்ரவரி 24 ஆந் திகதி காலாவதியாகியபோதும், 2018 ஏப்ரல் 19 ஆந் திகதியளவிலும் நிர்மாணப் பணிகள் முடிவடையாது இருந்தன. ஆகவே, செயலாற்றல் பிணை முறியினது செல்லுபடிக் காலத்தை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(iii) பொருட் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரமின்றி நிறைவேற்றப்பட்ட மேலதிக வேலைகளுக்கு ரூபா 6,824,841 ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வேலையை நிறைவடையச் செய்வதற்காக மேலும் செலவழிக்க வேண்டியிருந்த ரூபா 15,652,564 அடங்கலாக அங்கீகரிக்கப்படாத மேலதிக வேலைகளது மொத்தக் கிரயம் ரூபா 22,477,405 ஆகவிருந்தது. அங்கீகாரமின்றி மேலதிக வேலைகளை மேற்கொள்வதும் மேலதிக வேலைகளுக்கான நிதியேற்பாடு இல்லாதிருந்தமையும் காரணமாக 2016 சனவரி 26 முதல் நிர்மாண வேலை நிறுத்தப்பட்டிருந்தது.

(iv) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், நிர்மாண நடவடிக்கைகள் 2015 சனவரி 29 ஆந் திகதியளவில் நிறைவடைய வேண்டுமாயினும், 2018 ஏப்ரல் 19 ஆந் திகதியளவிலும் ரூபா 21,283,641 ஒப்பந்தப் பெறுமதியுடனான முடிவடையாத வேலை, அரைவாசி முடிவடைந்த வேலைகள் மற்றும் மேலதிக வேலைகள் என்பன நிறைவேற்றப்படத் தவறியிருந்ததுடன், தாமதக் காலம் 03 ஆண்டுகளையும் கடந்திருந்தது.

(v) வேலை முடிவடைந்திராத கட்டிடத்தின் ஒப்பந்தப் பெறுமதியாகிய ரூபா 4,010,742 ஏற்புடைய வடிவத்திற்கிணங்காத மின் தூக்கி ஒன்று பொருத்தப்பட்டிருந்ததுடன், கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த 24 குளிரூட்டிகளுக்கு ரூபா 5,732,000 ஒப்பந்தகாரருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ்வியந்திரங்களது உத்தரவாதக் காலம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) ஒசுசலவிற்கென ரூபா 6,872,500 பெறுமதியான மின் உற்பத்தி சாதனத்தை கொள்வனவு செய்கையில் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.1.4, 6.3.3, 6.3.6, 5.3.11 எனும் வழிகாட்டிகளின் பிரகாரம் முறையே கேள்விகளைக் கோரும் ஆவணங்களுக்குரிய அறிக்கைகளை வைத்திருப்பதற்கும் கேள்வி திறப்பதற்கான குழுவை நியமிப்பதற்கும் கேள்வி திறப்பது தொடர்பான

நடவடிக்கைகளைக் குறிப்பிடப்பட்ட மாதிரிப் படிவத்தில் அறிக்கையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் பெறப்பட்ட கேள்விகளுக்கான பிணை முறி 2016 செப்டெம்பர் 06 ஆந் திகதி காலாவதியாகியதன் பின்னரே பொருட் கொள்வனவு நடைமுறைகளுக்குரிய சகல பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**6.2 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்**

2016 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதியளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிராததுடன், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் அவ்வாண்டின் பொருட்டுத் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையினது வரைவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் துறைகளில் உள்ள நலிவுகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | ஒசுசலக்களது செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடு | இழப்பிற்கான காரணத்தைக் கண்டறிந்து இழப்பைக் குறைப்பதற்கு போதிய நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | பதவியணி முகாமைத்துவம் | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |